# 27. உள்ளூர்ச் சிவசுப்பிரமணியர் சதகம்

## முதல் 10 பாடல்கள்

இந்நூலில் உள்ள பாடல்கள் முதலில் சுவாமிகள் இயற்றியவாறும் பின்பு சித்தாந்த செல்வர், அருநூற்புலமை ஆன்றோர் பேராசிரியர் டாக்டர் ப. இராமன், அவர்களின் வழிக்காட்டுதல் பெயரில் இப் பாடல் என்னைப் போல் எளியவர் படிப்பதற்கு ஏற்றவாறு பிரித்தும் அந்த பாடல்களுக்கு விளக்கங்களும் கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பிரித்து கொடுப்பது எளிய முறையில் கற்றுக் கொள்ளுவதற்க்கு மட்டும் தான் பயன்படுத்தப்பட வேண்டும்.

திருவேறும் வேதநவி லொருவர்குரு வேநந்தி
தெளியவுரை தந்தகுருவே
சிவமகிமை நாரதற் கோதுகுரு வேபொதிகை
திகழ்முனிக் கருள்செய்குருவே
கருதரிய வொருசொல்லை யாறுபெயர் பக்குவங்
கண்டன்று சொற்றகுருவே
கங்குல்பக லற்றபே ரின்பவீ டடையரா
கவனுக் குரைத்தகுருவே
இருளற வெனச்சுக முனிக்கருள்செய் குருவேயெ
னிதயத் தமர்ந்தகுருவே
ஏதிலுணர் வுயர்வாம தேவர்குரு வேயுலக
மெங்குமவிர் கின்றகுருவே
திருவுள முவந்தருள் புரிந்தென்னை யாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

*திரு ஏறும் வேத நவில் ஒருவர் குருவே நந்தி*
*தெளிய உரை தந்த குருவே*
*சிவ மகிமை நாரதற்கு ஓது குருவே பொதிகை*
*திகழ் முனிக்கு அருள் செய் குருவே*
*கருத அரிய ஒரு சொல்லை ஆறுபெயர் பக்குவம்*
*கண்டு அன்று சொற்ற குருவே*
*கங்குல் பகல் அற்ற பேரின்ப வீடு அடைய*
*ராகவனுக்கு உரைத்த குருவே*
*இருள் அர எனச் சுகமுநிக்க்கு அருள் செய் குருவே*
*என் இதயத்து அமர்ந்த குருவே*
*ஏது இல் உணர் உயர் வாமதேவர் குருவே உலகம்*
*எங்கும் அவிர்கின்ற குருவே*
*திருவுளம் உவந்து அருள் புரிந்து என்னை ஆள் அரோ*
*தித்திக்கும் முத்தி முதலே*
*தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள் ஊரில் வளர்*
*சிவ சுப்பிர மணிய தேவே.* 1.

இனிக்கின்ற முத்திக்குத் தலைவனே! தெளிந்த அறிவுக் கடல் பொங்கும் இதயம் என்னும் அறிவிருக்கும் தலத்தில் எழுந்தருளியுள்ள சிவசுப்பிரமணியக் கடவுளே! மேன்மைமிக்க வேதங்களைத் தம் திருவாயால் கூறியருளிய சிவபெருமானுக்குப் பிரணவப் பொருளை விளக்கி உரைத்த குருவே! பதிஞானம் வேண்டித் தவம் செய்த நந்திக் கடவுளுக்குத் தெளிவாகுமாறு பதிபசுபாச உண்மையை விளக்கியருளிய குருவே! நாரத மகா முனிவர்க்குச் சிவன் பெருமையை ஓதியருளிய குருவே! பொதிகை மலையில்

எழுந்தருளியுள்ள அகத்திய முனிவர்க்ு பிரணவத்தையும், தமிழ் இலக்கிய இலக்கணங்களையும் விளக்கி உரைத்தருளிய குருவே! நினைத்தற்கரிய ஒரு சொல்லைப் பராசர முனிவர் புதல்வர்கள் தப்தர், அனந்தர், சதர்முகர், சக்கரபாணி, மாலி, நந்தி ஆகிய ஆறு பேர்களுக்கு, அவர்தம் பக்குவ நிலையை உணர்ந்து, மௌன ஞான யோகத்திலிருந்து சின்முத்திரை காட்டி உபதேசித்த குருவே! இரவும் பகலும் இல்லாத பேரின்ப வீட்டை அடைவதற்குத் தசரத ராமனுக்கு உபதேசம் செய்த குருவே! இருள் மலம் எனும் ஆணவமலம் ஒழிய சுக முனிவர்க்கு அருள் செய்த குருவே! என் இதயத்தில் எழுத்தருளியுள்ள குருவே! குற்றமில்லாத ஞானமுடைய மேலான வாமதேவர் குருவே! உலகமெல்லாம் விளங்கும் குருவே! உனது திருவுளத்தில் உவகை கொண்டு அருள் புரிந்து என்னை அடிமை கொண்டருள்வாயாக!

ஆக்கைக்கு மாவிக்கு மாதார மாயிருந்
தாட்டுவிக் கின்றசிவமே
அறிவினுக் கறிவா யிருந்ததனை யறிவிக்க
வறிவா யியங்குசிவமே
வாக்குக்கு மனதுக்கு மெட்டாத வத்துவித
வத்துவா யுள்ளசிவமே
வளர்பிறவி யாழ்கடல் கடக்குநர் களுக்குறுதி
மல்குபுணை யாகுசிவமே
சூக்குமங் கட்குமொரு சூக்கும மெனப்பனுவல்
சொல்லழிவி லாதசிவமே
தொல்லைவினை யாவுந் துமித்துமதி யமுதச்
சுகானந்த வீடெய்துவான்
சீக்கிர மெனைத்தடுத் தடிமைகொண் டாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

*ஆக்கைக்கும் ஆவிக்கும் ஆதாரமாய் இருந்து*
*ஆட்டுவிக்கின்ற சிவமே*
*அறிவினுக்கு அறிவாய் இருந்து அதனை அறிவிக்க*
*அறிவாய் இயங்கு சிவமே*
*வாக்குக்கும் மனதுக்கும் எட்டாத அத்துவித*
*வத்துவாய் உள்ள சிவமே*
*வளர்பிறவி ஆழ்கடல் கடக்குநர்களுக்கு உறுதி*
*மல்கு புணையாகு சிவமே*
*சூக்குமங்கட்கும் ஒரு சூக்குமம் எனப் பனுவல்*
*சொல் அழிவு இலாத சிவமே*
*தொல்லை வினையாவும் துமித்து மதி அமுதச்*
*சுகானந்த வீடு எய்துவான்*
*சீக்கிரம் எனைத் தடுத்து அடிமை கொண்டு ஆள் அரோ*
*தித்திக்கும் முத்தி முதலே*
*தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள் ஊரில் வளர்*
*சிவ சுப்பிரமணிய தேவே.* 2.

இனிக்கின்ற முத்திக்குத் தலைவனே! தெளிந்த அறிவுக் கடல் பொங்கும் இதயம் என்னும் அறிவிருக்கும் தளத்தில் எழுந்தருளியுள்ள சிவசுப்பிரமணியக் கடவுளே! உடம்புக்கும் உயிர்க்கும் ஆதாரமாகவிருந்து கொண்டு, ஆட்டுவிக்கின்ற சிவமே! சிற்றறிவான உயிருக்கு அறிவாய் இருந்துகொண்டு, அவ்வுயிர்க்கு அறிவுக்கு அறிவாக இயங்கும் சிவமே! வாக்குக்கும் மனதுக்கும் எட்டாத அத்துவிதப்

பொருளாயுள்ள சிவமே! வளர்ந்துகொண்டே இருக்கின்ற பிறவி என்னும் ஆழ்ந்த கடலைக் கடக்க முயல்வோர்க்கு நன்மையை மிகுதியாக அளித்துத் தெப்பமாகும் சிவமே! சூக்குமங்களுக்கெல்லாம் அதி சூக்குமம் என நூல்கள் கூறும் அழிவில்லாத சிவமே! பழவினையான சஞ்சித கன்மம் யாவையும் ஒழித்து, அறிவமுதச் சுகானந்த வீடுபெறும் பொருட்டு விரைவாக என்னை உலகப் பற்றிலிருந்து தடுத்து அடிமை கொண்டருள்வாயாக!

மானமறு பேரண்ட பகிரண்ட மெங்கணு
மலிந்துள விலாசவொளியே
மாயைநெடு வலிகடிந் தருணெறியி னின்றுளார்
வழிபட் டடைந்தவொளியே
ஞானிகள் புலத்திறையு மணுகாம லிருள்போழு
ஞானவா னந்தவொளியே
நலிவில்பே ரின்பவீ டென்றும்பிர காசிக்க
நாணாளு நிலவுமொளியே
ஊனரம் பென்புரு வினுக்குள்வதி தருமுயிர்க
ளுண்ணிலையி லொளிருமொளியே
உற்றுணர வுரியவிழி யாயவொளி யேயென்ற
னுள்ளத்தை நேர்படுத்தித்
தேனிற் சிறந்ததிரு வருளளித் தாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

*மானம் அறு பேர்அண்டம் பகிரண்டம் எங்கணும்*
*மலிந்து உள விலாச ஒளியே*
*மாயை நெடுவலி கடிந்து அருள் நெறியில் நின்று உளார்*
*வழிபட்டு அடைந்த ஒளியே*
*ஞானிகள் புலத்து இறையும் அணுகாமல் இருள் போழு*
*ஞான ஆனந்த ஒளியே*
*நலிவு இல் பேரின்ப வீடு என்றும் பிரகாசிக்க*
*நாள் நாளு நிலவும் ஒளியே*
*ஊன் நரம்பு என்பு உருவினுக்குள் வதி தரும் உயிர்கள்*
*உள் நிலையில் ஒளிரும் ஒளியே*
*உற்று உணர உரிய விழியாய ஒளியே என்றன்*
*உள்ளத்தை நேர்படுத்தித்*
*தேனில் சிறந்த திரு அருள் அளித்து ஆள் அரோ*
*தித்திக்கும் முத்தி முதலே*
*தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள் ஊரில் வளர்*
*சிவ சுப்பிரமணிய தேவே.* 3.

இனிக்கின்ற முத்திக்குத் தலைவனே! தெளிந்த அறிவுக் கடல் பொங்கும் இதயம் என்னும் அறிவிருக்கும் தலத்தில் எழுந்தருளியுள்ள சிவசுப்பிரமணியக் கடவுளே! அளவற்ற பேரண்டங்கள், புற அண்டங்கள் ஆகிய எவ்விடமும் மிகுந்துள்ள அழகிய ஒளியே! மாயையின் பெரிய வலிமை ஒழித்து அருள் நெறியில் நின்றுள்ள அடியார்கள் வழிபட்டு அடைந்த ஒளியே! ஞானிகளிடத்தில் சிறிதும் அணுகாமல், ஆணவமல இருளைப் பிளக்கும் ஞான ஆனந்த ஒளியே! கூறப்படும் பேரின்ப வீடு என்றும் ஒளிவீச நாளும் நாளும் நிலவுகின்ற ஒளியே! தசை, நரம்பு, எலும்பு ஆகியவற்றிலான உடம்பினுக்குள் தங்கும் உயிர்களின் உள் நிலையில் ஒளிரும் ஒளியே! நன்கு அறிய உரிய கண்ணாகிய ஒளியே! எனது மனத்தைச் செம்மைப்படுத்தித் தேனினும் சிறந்த திருவருளை அளித்து அடிமைகொள்வாயாக!

போதவெளி யாயுள்ள நாதநிலை மேலொளிசெய்

பொருவறு சுயஞ்சோதியே
பூதப்ர பஞ்சநிலை யெங்கணு நிறைந்தபரி
பூரண வியன்சோதியே
கோதில்சிவ ராசயோ கத்திருவர் முன்னர்க்
குதிக்குஞ் செழுஞ்சோதியே
குன்றாத பேரின்ப மன்றக மிலங்குமொரு
கோலப் பரஞ்சோதியே
மூதறி வெனுங்கடலின் மூழ்கறிஞர் போதத்தை
மூசிமின் னுஞ்சோதியே
மூடவடி யேன்மூல விருளிரிய வென்னுளு
முயங்குசெம் பொற்சோதியே
தீதிலா னந்தமா வருள்புரிந் தாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

*போத வெளியாய் உள்ள நாதநிலை மேல் ஒளி செய்*
*பொருவு அறு சுயஞ் சோதியே*
*பூதப்ரபஞ்ச நிலை எங்கணும் நிறைந்த பரி*
*பூரண வியன் சோதியே*
*கோது இல் சிவராச யோகத்து இருவர் முன்னர்க்*
*குதிக்கும் செழுஞ் சோதியே*
*குன்றாத பேரின்பம் அன்று அகம் இலங்கும் ஒரு*
*கோலப் பரஞ்சோதியே*
*மூது அறிவு எனும் கடலில் மூழ்கு அறிஞர் போதத்தை*
*மூசி மின்னும் சோதியே*
*மூட அடியேன் மூல இருள் இரிய என் உளும்*
*முயங்கு செம்பொன் சோதியே*
*தீது இல் ஆனந்த மா அருள் புரிந்து ஆள் அரோ*
*தித்திக்கும் முத்தி முதலே*
*தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள் ஊரில் வளர்*
*சிவ சுப்பிரமணிய தேவே.* 4.

இனிக்கின்ற முத்திக்குத் தலைவனே! தெளிந்த அறிவுக் கடல் பொங்கும் இதயம் என்னும் அறிவிருக்கும் தலத்தில் எழுந்தருளியுள்ள சிவசுப்பிரமணியக் கடவுளே! அறிவு வெளியாயுள்ள நாத நிலையின் மேல் ஒளி செய்கின்ற ஒப்பற்ற சுயமான சோதியே! ஐம்பூதங்களினாலான உலகமெங்கும் நிறைந்த முழு நிறைவான அகன்ற சோதியே! குற்றமற்ற சிவராசயோகச் செல்வர் முன்னே தோன்றும் வளமான சோதியே! குறையாத பேரின்பமன்றில் விளங்குமொரு அழகிய பரஞ்சோதியே! பேரறிவு எனும் கடலில் மூழ்கும் அறிஞர் அறிவை மொய்த்து மின்னும் சோதியே! மூடனான அடியேன் ஆணவமல இருள் ஒழிய என்னுள்ளும் கலந்திருக்கும் செம்பொற்சோதியே! குற்றமில்லாத ஆனந்தமாக அருள்புரிந்து என்னை அடிமை கொண்டருள்வாயாக!

அண்டமெனு முண்டைபல வருள்வெளியில் வைத்தகண்
டாகார மானபொருளே
அளவற்ற பெரியவெளி பெரியவெளி யென்றறிஞ
ரறையுமொரு பெரியபொருளே
பண்டுநான் மறையந்த மாகத் திகழ்ந்துமுப்
பாழ்கடந் துள்ளபொருளே
பல்லுரு விலுங்கலந் தறிவீன ரறியப்
படாதவியல் புடையபொருளே

தொண்டர்க ளகப்புலங் குடிகொடெந் நாளுமொரு
துணையின் றியங்குபொருளே
துரியமெய்ஞ் ஞானப் பெருஞ்சோதி யாயேழை
துயர்நூற வந்தபொருளே
செண்டுமுகை யார்மையல் சீத்தென்னை யாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

*அண்டம் எனும் உண்டை பல அருள்வெளியில் வைத்த அகண்*
*டாகாரமான பொருளே*
*அளவற்ற பெரிய வெளி பெரிய வெளி என்ற அறிஞர்*
*அறையும் ஒரு பெரிய பொருளே*
*பண்டு நான்மறை அந்தமாகத் திகழ்ந்து முப்பாழ்*
*கடந்து உள்ள பொருளே*
*பல் உருவிலும் கலந்து அறிவீனர் அறியப்*
*படாத இயல்பு உடைய பொருளே*
*தொண்டர்கள் அகப்புலம் குடிகொடு எந்நாளும் ஒரு*
*துணையின்று இயங்கு பொருளே*
*துரிய மெய்ஞ்ஞானப் பெருஞ் சோதியாய் ஏழை*
*துயர் நூற வந்த பொருளே*
*செண்டு முகையார் மையல் சீத்து என்னை ஆள் அரோ*
*தித்திக்கும் முத்தி முதலே*
*தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள் ஊரில் வளர்*
*சிவ சுப்பிரமணிய தேவே.* 5.

இனிக்கும் முத்திக்குத் தலைவனே! தெளிந்த அறிவுக் கடல் பொங்கும் இதயம் என்னும் அறிவிருக்கும் தலத்தில் எழுந்தருளியுள்ள சிவசுப்பிரமணியக் கடவுளே! அண்டங்கள் என்னும் உருண்டைகள் பலவற்றையும் தம் அருள்வெளியில் வைத்து எல்லையற்ற ஆகாசமாய் உள்ள பொருளே! அளவற்ற பெரிய வெளி என்று ஆகாசமாய் உள்ள பொருளே! அளவற்ற பெரிய வெளி என்று அறிஞர் கூறும் ஒப்பற்ற பெரிய பொருளே! பழைய வேதங்களின் முடிவாக விளங்கி முப்பாழ் எனும் மாயை, உயிர், அருள் என்பனவற்றைக் கடந்துள்ள பொருளே! தொண்டர்கள் உள்ளமெனும் இடத்தில் குடிகொண்டு எந்நாளும் ஒரு துணையும் தனக்கில்லாமல் செயல்படும் பொருளே! துரியம் என்னும் நான்காம் நிலையான மெய்யறிவுப் பேரொளியாய் விளங்கி, அறிவில் ஏழையாயுள்ள எனது துன்பத்தை ஒழிக்க வந்த பொருளே! பந்து போன்ற தனங்கள் உடைய மகளிர்பால் கொண்ட மயக்கம் ஒழித்து என்னை அடிமை கொள்வாயாக!

முத்தர்க டெவிட்டப் புசித்துக் களிக்குநிஜ
மோனவா னந்தவமுதே
முப்பாழ் கடந்துளவொர் சிற்பர நபத்தினடு
மூலத்து நல்லவமுதே
பத்திமையர் பத்திவயி ராக்கிய நிலைக்குமா
பண்ணுநிலை யின்பவமுதே
பவக்கலி கடக்கவுள் வலித்துத் துறந்தவர்
பசிக்கெடுத் துண்ணுமமுதே
நித்தமுனை நினையுமென் புத்திகரு துற்றபடி
நிலையின்றி யோடுநெஞ்சை
நேர்பட நடத்தியைம் பொறிகளை யடக்குமொரு
நெறிநின் றெனைத்தெரிந்துன்
சித்தொடுங் கூடியினி துய்யவெனை யாளரோ
தித்திக்கு முத்திமுதலே

தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

*முத்தர்கள் தெவிட்டப் புசித்திக் களிக்கும் நிஜ*
*மோன ஆனந்த அமுதே*
*முப்பாழ் கடந்து உள ஓர் சிற்பர நபத்தின் நடு*
*மூலத்து நல்ல அமுதே*
*பத்தி இமையர் பத்தி வயிராக்கிய நிலைக்குமா*
*பண்ணு நிலை இன்ப அமுதே*
*பவக்கலி கடக்க உள் வலித்துத் துறந்தவர்*
*பசிக்கு எடுத்து உண்ணும் அமுதே*
*நித்தம் உனை நினையும் என் புத்தி கருது உற்றபடி*
*நிலையின்றி ஓடு நெஞ்சை*
*நேர்பட நடத்தி ஐம்பொறிகளை அடக்கும் ஒரு*
*நெறி நின்று எனைத் தெரிந்து உன்*
*சித்தொடும் கூடி இனிது உய்ய எனை ஆள் அரோ*
*தித்திக்கும் முத்தி முதலே*
*தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள் ஊரில் வளர்*
*சிவ சுப்பிரமணிய தேவே.* 6.

இனிக்கும் முத்திக்குத் தலைவனே! தெளிந்த அறிவுக் கடல் பொங்கும் இதயம் என்னும் முத்தியடைந்தவர்கள் தெவிட்ட உண்டு மகிழும் மெய்யான மௌன ஆனந்த அமுதே! முப்பாழ்களையும் கடந்துள்ள ஓர் அறிவு வெளியான ஆகாசத்தின் நடு மூலத்திலுள்ள சிறந்த அமுதே! பத்தியுடையோர் பத்தி வைராக்கியம் நிலைக்கும் படிச் செய்யும் நிலையான இன்ப அமுதே! பிறவிக்கடலைக் கடக்க மனத்துள் உறுதி பூண்டு, என் அறிவு கருதியபடி நிலையில்லாமல் ஓடுகின்ற மனத்தைச் செம்மைப்படும்படிநடத்தி, ஐம்பொறிகளை அடக்கும் ஒரு நெறியில் நின்று என்னை அறிந்துகொண்டு, உன் அறிவுடன் கூடி நன்கு உய்யும்படி எனை அடிமை கொண்டருள்வாயாக!

நில்லாத பிரபஞ்ச வாழ்விலுழ லாருள
நிறைந்தநித் தியானந்தமே
நிட்டையின் மனோலயங் கண்டபொழு துச்சிமே
னிற்குநித் தியானந்தமே
பொல்லாத மனமருட் டுன்பினை யெருக்குசிவ
போதநித் தியானந்தமே
புகலரிய பதிஞான கதிநாடு நர்க்கருள்
புரக்குநித் தியானந்தமே
பல்லா யிரங்கோடி யண்டங்க ளெங்கணும்
பரவுநித் தியானந்தமே
பத்தனென தெண்ணக் குறிப்பினை யறிந்தினிப்
பருவரல்க ளுள்ளநெறியிற்
செல்லாது செய்துனக் காளாக வாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

*நில்லாத பிரபஞ்ச வாழ்வில் உழலார் உள*
*நிறைந்த நித்திய ஆனந்தமே*
*நிட்டையின் மனோலயம் கண்டபொழுது உச்சிமேல்*
*நிற்கு நித்திய ஆனந்தமே*
*பொல்லாத மனம் மருள் துன்பினை எருக்கு சிவ*

போத நித்திய ஆனந்தமே
புகல் அரிய பதி ஞான கதி நாடுநர்க்கு அருள்
புரக்கு நித்திய ஆனந்தமே
பல்லாயிரம் கோடி அண்டங்கள் எங்கணும்
பரவு நித்திய ஆனந்தமே
பத்தன் எனது எண்ணக் குறிப்பினை அறிந்து இனிப்
பருவரல்கள் உள்ள நெறியில்
செல்லாது செய்து உனக்கு ஆளாக ஆள் அரோ
தித்திக்கும் முத்தி முதலே
தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள் ஊரில் வளர்
சிவ சுப்பிரமணிய தேவே. 7.

இனிக்கும் முத்திக்குத் தலைவனே! தெளிந்த அறிவுக் கடல் பொங்கும் இதயம் என்னும் அறிவிருக்கும் தலத்தில் எழுந்தருளியுள்ள சிவ சுப்பிரமணியக் கடவுளே! நிலையில்லாத உலக வாழ்வில் உழலாதவர் உள்ளத்தில் நிறைந்த நித்தியானந்தமே! நிட்டையில் மனம் இறைவனுடன் ஐக்கியமாதலைக் கண்டபொழுது, பிரமரந்திரத்திற்கு மேலே நிற்கும் நித்தியானந்தமே! பொல்லாத மனமருட்சியான துன்பினைப் போக்கும் சிவஞான நித்தியானந்தமே! சொல்லுதற்கரிய பதி ஞானத்தை நாடுவோர்க்கு அருளைத் தரும் நித்தியானந்தமே! பல்லாயிரங்கோடி அண்டங்கள் எங்கும் பரவும் நித்தியானந்தமே! பத்தனாகிய எனது எண்ணக் குறிப்பினை அறிந்து, இனிமேல் துன்பமுள்ள நெறிகளில் செல்லாது செய்து உனக்கு அடிமையாக ஆண்டு கொண்டருள்வாயாக!

ஆதார மாறிற்கு மாதார மாயிருந்
தரசுபுரி கின்றவரசே
அண்டவெளி தன்னிலே யானந்த நிர்த்தமி
டகண்டசிவ யோகவரசே
மாதா பிதாவாக நின்றெனை யிரக்ஷித்து
மதியதர் கொடுத்தவரசே
மானாபி மானவச டறவன்பர் பக்கலருள்
வருஷிக்கு முகிலினரசே
சூதா மூடங்குகா திடுமொரு மருந்தைச்
சுறுக்கினி லுரைக்குமரசே
தோற்றமே ழையும்வகுத் தாளுமர சேதொண்டர்
தோத்திர மதிக்குமரசே
தீதான செயிர்துமித் தென்னைநீ யாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

ஆதாரம் ஆறிற்கும் ஆதாரமாய் இருந்து
அரசு புரிகின்ற அரசே
அண்டவெளி தன்னிலே ஆனந்த நிர்த்தம் இடு
அகண்ட சிவயோக அரசே
மாதா பிதாவாக நின்று எனை இரட்சித்து
மதி அதர் கொடுத்த அரசே
மான அபிமான அசடு அற அன்பர் பக்கல் அருள்
வருஷிக்கு முகிலின் அரசே
சூதாம் முடங்குகாது இடும் ஒரு மருந்தைச்
சுறுக்கினில் உரைக்கும் அரசே
தோற்றம் ஏழையும் வகுத்து ஆளும் அரசே தொண்டர்
தோத்திர மதிக்கும் அரசே

*தீதான செயிர் துமித்து என்னை நீ ஆள் அரோ*
*தித்திக்கும் முத்தி முதலே*
*தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள் ஊரில் வளர்*
*சிவ சுப்பிரமணிய தேவே.* 8.

இனிக்கும் முத்திக்குத் தலைவனே! தெளிந்த அறிவுக் கடல் பொங்கும் இதயம் என்னும் அறிவிருக்கும் தளத்தில் எழுந்தருளியுள்ள சிவ சுப்பிரமணியக் கடவுளே! மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்ஞை என்னும் ஆறு ஆதாரங்களாயிருந்து அரசு புரிகின்ற அரசே! அண்டவெளியிலே ஆனந்த நடனமிடும் அகண்ட சிவயோக அரசே! மாதா பிதாவாக இருந்து என்னைக் காத்து ஞான நெறியைக் கொடுத்த அரசே! மானம் அபிமானம் என்னும் அறியாமை நீங்கின அன்பர்க்கு அருளைப் பொழியும் மேகமான அரசே! வஞ்சனை ஆகும் ஒன்றிப்பை ஒழித்திடும் ஒரு மருந்தைச் சுறுக்கினில் கூறும் அரசே! ஏழு பிறப்புகளையும் படைத்து ஆளும் அரசே! தொண்டர் செய்யும் தோத்திரங்களை மதிக்கும் அரசே! தீமையான குற்றத்தை ஒழித்து என்னை அடிமை கொண்டருள்வாயாக!

ஈரே ழுலோகமெல் லாம்வகுத் திடையின்றி
யேகநிறை வானபரமே
எளியனை யணத்தழிவி லாதவனு பூதிதர
வீசனா மருவுபரமே
தீராத கோசபா சப்பின்ன லைத்தொண்டர்
சேதித் தறிந்தபரமே
செப்பரிய பேரின்ப வாரியிறை யாமன்னு
சின்மயா னந்தபரமே
பேரூர் குலங்குடி பிறப்பிறப் பென்பவைகள்
பேசவிசை யாதபரமே
பிண்டநீ டண்டபந் தங்கடந் துன்பதம்
பெற்றுமுட் டாதசெல்வச்
சீரோ டிருக்கவருள் செய்தென்னை யாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

*ஈரேழு லோகம் எல்லாம் வகுத்து இடையின்றி*
*ஏக நிறைவான பரமே*
*எளியனை அணைத்து அழிவிலாத அனுபூதி தர*
*ஈசனா மருவு பரமே*
*தீராத கோச பாசப் பின்னலைத் தொண்டர்*
*சேதித்து அறிந்த பரமே*
*செப்பரிய பேரின்ப வாரி இறையா மன்னு*
*சின்மயா ஆனந்த பரமே*
*பேர் ஊர் குலம் குடி பிறப்பு இறப்பு என்பவைகள்*
*பேச இசையாத பரமே*
*பிண்டம் நீடு அண்டம் பந்தம் கடந்து உன் பதம்*
*பெற்று முட்டாத செல்வச்*
*சீரோடு இருக்க அருள் செய்து என்னை ஆள் அரோ*
*தித்திக்கும் முத்தி முதலே*
*தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள் ஊரில் வளர்*
*சிவ சுப்பிரமணிய தேவே.* 9.

இனிக்கும் முத்திக்குத் தலைவனே! தெளிந்த அறிவுக் கடல் பொங்கும் இதயம் என்னும் அறிவிருக்கும் தளத்தில் எழுந்தருளியுள்ள சிவ சுப்பிரமணியக் கடவுளே! பூலோகம், புவர்லோகம்,

சுவர்லோகம், சனலோகம், தபோலோகம், மகாலோகம், சத்யலோகம் என்னும் மேல் உலகங்கள் ஏழு உலகும், அதலம், விதலம், சுதலம், தராதலம், மகாதலம், இரசாதலம், பாதாளம் என்னும் கீழ் உலகங்கள் ஏழையும் படைத்து, இடைவெளியில்லாமல் ஒரு நிறைவாயுள்ள பரமே! எளியனை உன்னுடன் சேர்த்துக்கொண்டு தாழ்வில்லாத அனுபூதியைத் தர ஈசனாக வரும் பரமே! தீராத சமய சாத்திரங்கள் என்னும் மாயையான சிக்கல்களை அழித்துத் தொண்டர்கள் அறிந்துகொண்ட பரமே! சொல்லுதற்கரிய பேரின்பக் கடலான கடவுளாய் நிலைபெறும் அறிவு மயமான ஆனந்த பரமே! பேர், ஊர், குலம், குடி, பிறப்பு, இறப்பு என்பவைகள் என்றுன்னைப் பேசுதர்க்குப் பொருந்தாத பரமே! சிறிய உருவங்கள், பெரிய அண்டங்கள் ஆகிய பற்றுக்களைக் கடந்து, உன் திருவடியைப் பெற்றுக் குறையாத அருட் செல்வச் சிறப்புடன் இருக்க அருள் செய்த என்னை அடிமை கொண்டருள்வாயாக!

முக்குண மிலாதசட் குணசாக வதயோக
முதல்வனா யுள்ளவிறையே
மும்மலங் களுமிலா நின்மல நிராகார
மோனவருண் மூலவிறையே
மிக்களி யுளர்க்கமுத நற்கனியை நல்கருள்
விருக்கமா மன்னுமிறையே
வேதங்க டேடிமுடி வறியாத வற்புத
விலாசப்பிர காசவிறையே
துக்கசுக மொட்டுணர்வு முற்பவ மயக்கமுந்
தொடரா வதீதவிறையே
துவிதத்தை நீக்கியத் துவிதத்தி னினைநெஞ்சர்
தோயின்பி னிற்குமிறையே
திக்கொன் றிலாவென்னை யாதரித் தாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

*முக்குணம் இலாத சட்குன சாசுவத யோக*
*முதல்வனாய் உள்ள இறையே*
*மும்மலங்களும் இலா நின்மல நிராகார*
*மோன அருள் மூல இறையே*
*மிக்கு அளி உளர்க்கு அமுத நற்கனியை நல்கு அருள்*
*இருக்க மாமன்னும் இறையே*
*வேதங்கள் தேடி முடிவு அறியாத அற்புத*
*விலாசப் பிரகாச இறையே*
*துக்க சுகம் ஒட்டு உணர்வும் உற்பவம் மயக்கமும்*
*தொடரா அத் இறையே*
*துவிதத்தை நீக்கி அத துவிதத்தின் நினை நெஞ்சர்*
*தோய் இன்பில் நிற்கும் இறையே*
*திக்கு ஒன்று இலா என்னை ஆதரித்து ஆள் அரோ*
*தித்திக்கும் முத்தி முதலே*
*தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள் ஊரில் வளர்*
*சிவ சுப்பிரமணிய தேவே.* 10.

இனிக்கும் முத்திக்குத் தலைவனே! தெளிந்த அறிவுக் கடல் பொங்கும் இதயம் என்னு அறிவிருக்கும் தலத்தில் எழுந்தருளியுள்ள சிவசுப்பிரமணியக் கடவுளே! சத்துவம், இராசதம், தாமதம் ஆகிய மூன்று குணங்கள் இல்லாமல் அருட் குணங்களான முற்றுமுணர்தல், வரம்பிலின்பமுடைமை, இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், தன்வயத்தனாதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை ஆகிய ஆறு குணங்களுடைய நிலையான யோக முதல்வனாய் உள்ள இறையே! ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்கள் இல்லாத உருவமற்ற மௌன அருளின் மூலமாயுள்ள இறையே! மிகுந்த

கருணையுடையவர்க்கு அமுதம் என்னும் இன்சுவைக் கனியை அளித்தருளும் மரமாக உள்ள இறையே! வேதங்கள் தேடி முடிவை அறிய முடியாத அதிசய அழகுடைய ஒளியான இறையே! துன்பம், இன்பம், பற்று, பிறப்பு, மயக்கமும் தொடராத அதீத இறையே! இரண்டும் என்னும் பேதத்தை நீக்கி இரண்டற்ற நிலை என்னும் அத்துவித முறைப்படி, நினைக்கும் உள்ளத்தார் மூழ்கும் இன்பத்திலுள்ள இறையே! ஆதரவு ஒன்றுமில்லாத என்னை ஆதரித்து அடிமை கொண்டருள்வாயாக!